## மின்னல் பாய்ந்ததில் பசுமாடு உயிரிழப்பு

**திருப்பரங்குன்றம், ஜூன் 28:** திருமங்கலம் அருகே சனிக்கிழமை இரவு பெய்த மழையின் போது, மின்னல் பாய்ந்ததில் பசுமாடு உயிரிழந்தது.

திருமங்கலம் அருகேயுள்ள எஸ்.பெருமாள்கோவில்பட்டியைச் சேர்ந்தவர் சுரேஷ். இவரது சொந்தமாக மாடு வளர்த்து வருகிறார். இந்தப் பசுமாடு இவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் சனிக்கிழமை மாலை மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது, இந்தப் பகுதியில் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இந்த நிலையில், மின்னல் பாய்ந்ததில் அந்த பசுமாடு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது.

சொக்கானூரணி கால்நடை மருந்துவக் குழுவினர் உயிரிழந்த பசுமாட்டுக்கு ஞாயிற்றுக்கிழமை கூறாய்வு செய்து புதைத்தனர்.

இதுகுறித்து வருவாய்த் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 'பிற கட்சியினரை விமர்சிப்பதை திமுகவினர் தவிர்க்க வேண்டும்'



மதுரையில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் துணைத் தலைவர் எஸ்.எம்.இதயத்துல்லா. உடன் மதுரை மாநகர மாவட்ட காங்கிரஸ் குழுத் துணைத் தலைவர் செய்யது பாபு.

**மதுரை, ஜூன் 28:** திமுக கூட்டணியிலிருந்து விலகிய பிற கட்சியினரை விமர்சிப்பதை திமுகவினர் தவிர்க்க வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் துணைத் தலைவர் எஸ்.எம். இதயத்துல்லா தெரிவித்தார்.

இதுகுறித்து மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

தமிழகத்தில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள தவெக அரசு ஊழலை ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழகத்தில் திமுக என்பது பலம் பொருந்திய கட்சியாக இருந்து வருகிறது. உண்மையான எதிர்க்கட்சியாக திமுக செயல்பட்டால் தமிழகத்தில் எப்போதும் வேண்டுமானாலும் ஆட்சி மாற்றம் ஏற்படலாம். திமுக கூட்டணியிலிருந்து பிரிந்து சென்ற கட்சியினர் குறித்து அவதூறு பேசுபவர்களை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தடுக்க வேண்டும்.

காங்கிரஸின் அகில இந்தியத் தலைமை நியமித்துள்ள புதிய மாநிலத் தலைவரை கட்சியினர் ஏற்க வேண்டும். மாணவர் காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளில் பணியாற்றியுள்ள மாணிக்கம் தாகூர் கட்சியை வலுப்படுத்துவார் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழக காங்கிரஸில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் தொடர்பாக உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கையை ஒரு மாதத்துக்குள் அகில இந்திய காங்கிரஸ் தலைமையிடம் சமர்ப்பிக்க உள்ளோம் என்றார் அவர்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

**பொது**

**செந்தமிழ் கல்லூரி:** கருத்தரங்கம், தலைப்பு – தொல் பழங்குடிகள், காலை 10.

**ஆன்மிகம்**

**திருவள்ளுவர் கழகம்:** ஆன்மிக இலக்கியச் சொற்பொழிவு, தலைப்பு – திருமந்திரம், உரையாற்றுபவர் – அ.கி. செ.திருமாவளவன், மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் வடக்காடி வீதி, இரவு 7.

**CHANGE OF NAME**

I, **DAVID ANAND RAJA ANDREW JOSHAN** (Aadhaar No.3928 6024 2509), Son of A.J.David Anand Raja born on 28.02.2007 residing at Ward 5, Door No.7. Church Street, Royappanpatti, Uthamapalayam Taluk, Theni District, Tamil Nadu. Shall henceforth be known as **ANDREW JOSHAN**

**DAVID ANAND RAJA ANDREW JOSHAN**

Theni 22nd day of June, 2026

**CHANGE OF NAME**

I, **SAIYATHALI FATHIMA**, wife of Thiru Hakkim, born on 2nd June 1984 (District of Birth: Sivagangai), residing at No. 1/547, Maruthippatti, Muraiyur Post, Sivagangai-630 501, shall henceforth be known as **SYED ALI FATHIMA**

**SAIYATHALI FATHIMA**

Sivagangai, 26th May 2025.

**MANAPPURAM FINANCE LTD.**

CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

**தங்க நகைகள் பொது ஏலம்**

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 16.07.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

திண்டுக்கல், எரியோடு திண்டுக்கல், 0127390700032509, குஜிலியம்பாறை திண்டுக்கல், 0119240730025711, கொடைக்கானல், 0129200700041745, 1755, வேடசந்தூர், 0127070750000236, ஒய் எம் ஆர் பட்டி திண்டுக்கல், 0101900700760525, மதுரை, மதுரை மேற்கு மாசி வீதி, 0102550700754620, மதுரை அண்ணாநகர், 0112760700056609, பெரையூர் மதுரை, 0113020700070373, சோழவந்தான், 0113000700082304, தி. கல்லுப்பட்டி, 0119230700049528, சிக்கில் 0126730700067819, தேனி, போடிநாயக்கனூர், 0102570730013966, 4159, தேனி, 0104490730037629, விருதுநகர், அருப்புக்கோட்டை, 0103170730039909, பைப்பாஸ் ரோடு சாத்தூர், 0125790700071647, 1739, ராஜபாளையம், 0103110730013938, 4005, சிவகாசி, 0104980700768629, 0942, ஸ்ரீ வில்லிபுத்தூர், 0103020700136473, விருதுநகர், 0105000700885835, 0105000730103823, 4221,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

# 2.38 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டு மருந்து







1. மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முகாமில் குழந்தைக்கு போலியோ தடுப்பு சொட்டு மருந்து புகட்டிய அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார். 2. மதுரை அண்ணாநகர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற முகாமில், குழந்தைக்கு போலியோ தடுப்பு சொட்டு மருந்து புகட்டிய சுகாதாரத் துறைப் பணியாளர். 3. மதுரை மாவட்டம், கச்சைக்கட்டி கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குழந்தைக்கு போலியோ தடுப்பு சொட்டு மருந்து புகட்டிய சோழவந்தான் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கருப்பையா.

**மதுரை, ஜூன் 28:** மதுரை மாவட்டத்தில் 2.38 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டு மருந்து ஞாயிற்றுக்கிழமை புகட்டப்பட்டது.

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்வில், தமிழக எரிசக்தி, சட்டத் துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு போலியோ தடுப்பு சொட்டு மருந்து முகாமை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஏ.கல்யாணை, கோபிசன், கல்லூரி முதன்மையர் அருள்சுந்தரேஷ்குமார், மருத்துவர்கள், செவிலியர்கள் பலர் கலந்து கொண்டனர். இதேபோல, வாடிப்பட்டி அருகேயுள்ள கச்சைக்கட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற முகாமை சோழவந்தான் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கருப்பையா தொடங்கி வைத்தார்.

போலியோவை இந்தியாவிலிருந்து முழுமையாக ஒழிப்பதற்கு போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை, மாநகராட்சி, புறநகர்ப் பகுதிகள் என 1,705 இடங்களில் 5 வயதுக்குள்பட்ட 2 லட்சத்து 38 ஆயிரத்து 571 குழந்தைகளுக்கு சொட்டு மருந்து புகட்டப்பட்டது.

இந்த முகாமில் சுகாதாரத் துறையைச் சேர்ந்த 360 மேற்பார்வையாளர்கள், 1,083 பணியாளர்கள், சத்துணவுத் துறையில் 2,545 பணியாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த 42 பணியாளர்கள் உள்பட மொத்தம் 7,412 பேர் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், 101 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

## போதை மாத்திரைகள் விற்பனை: 6 பேர் கைது

**மதுரை/திருப்பரங்குன்றம், ஜூன் 28:** செக்கானூரணி பகுதியில் போதை மாத்திரைகளை விற்பனை செய்த 6 பேரை போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர்.

மதுரையை அடுத்த செக்கானூரணி, சுற்றுவட்டாரக் கிராமப் பகுதிகளில் போதை மாத்திரைகள் விற்பனை அதிகளவில் நடைபெறுவதாக போலீஸாருக்கு தகவல் வந்தது. இதையடுத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தேவநாதனின் தனிப் பிரிவு போலீஸார், செக்கானூரணியை சுற்றியுள்ள வடக்கம்பட்டி, கேசவன்பட்டி, சிக்கம்பட்டி உள்ளிட்டப் பகுதிகளில் சனிக்கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, ராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலத்தைச் சேர்ந்த சோபியோன்ராஜ் (20) போதை மாத்திரைகளுடன் போலீஸாரிடம் சிக்கினார். இவரிடம் நடத்திய விசாரணையில், வடக்கம்பட்டியைச் சேர்ந்த தென்னவன் (21), விசால் (19), கேசவன்பட்டியைச் சேர்ந்த லோகபாண்டி (21), கீழப்பச்சேரியைச் சேர்ந்த நந்தகுமார் (21), சிக்கம்பட்டியைச் சேர்ந்த சுபாஷ் (25)



போதை மாத்திரைகள் விற்பனை செய்து கைது செய்யப்பட்டவர்கள்.

ஆகிய 5 பேரும் இணையதளச் செயலி மூலம் தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை வாங்கி விற்பனை செய்தது தெரியவந்தது.

இதுகுறித்து செக்கானூரணி போலீஸார் வழக்குப் பதிவு செய்து 6 பேரையும் சனிக்கிழமை கைது செய்து, இவர்களிடமிருந்து 680 போதை மாத்திரைகள், ஒரு ஏர்கன், 11 வாள்கள், ஒரு கார், இரு சக்கர வாகனம், 6 கைப்பேசிகள், மடிக்கணினி, ரூ.5,100 ஆகியவற்றைப் பறிமுதல் செய்தனர்.

இதுகுறித்து மதுரை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் என்.தேவநாதன் கூறியதாவது:

போதைப்பொருள் புழக்கம், ஆயுதக் கலாசாரத்தில் ஈடுபடுவோர் மீதும், அவர்கள் உறவினர்கள் மீதும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அவர்களது அசையும், அசையா சொத்துகள் முடக்கப்படும். கஞ்சா, போதைப்பொருள்கள் குறித்த ரகசிய தகவல்களை பொதுமக்கள் 9498181206 என்ற எண்ணைத் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்றார் அவர்.

## 'ஆறுகள் மாசடைவதைத் தடுக்க முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்'

**மதுரை, ஜூன் 28:** ஆறுகள் மாசடைவதைத் தடுக்க தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதுகுறித்து தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபாரிகள் சங்கம் சார்பில் வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில்பெரும்பாலான ஆறுகள் மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்கிறது. கர்நாடக மாநிலத்திலிருந்தும் தமிழகம் வழியாக ஆறுகள் கிழக்கு நோக்கி தான் செல்கிறது. ஆந்திர மாநிலத்திலிருந்து சென்னை வரை வாய்க்கால் மூலம் தண்ணீர் வருகிறது. இந்தத் தண்ணீர் விவசாயத்துக்கு மட்டுமல்லாது பல மாவட்டங்களில் குடிநீருக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், ஆறுகள் தொடங்கும் இடத்திலிருந்து அவை பாய்ந்து செல்லும் பல ஊர்களில் கழிவுநீரும், தொழிற்சாலை கழிவுகளும் கலக்கின்றன. இதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும்.

குறிப்பாக, கோடைக் காலத்திலும் மதுரை வைகை ஆற்றில் தண்ணீருக்குப் பதிலாக கழிவுநீர், தொழிற்சாலை கழிவுகள் செல்கின்றன. மேலும், மாநகராட்சி கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையத்திலிருந்து சரியாக சுத்திகரிக்காமல் ஆற்றிலேயே விடப்படுகிறது.

எனவே, ஆறுகள் உற்பத்தியாகும் இடத்திலிருந்தே கழிவுநீர் கலக்காமல் பாதுகாக்க முதல்வர் ஜோசப் விஜய் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இதில் தெரிவிக்கப்பட்டது.

## மதுரையைக் குப்பையில்லாத நகராக மாற்ற விழிப்புணர்வுப் பேரணி

**மதுரை, ஜூன் 28:** மதுரையைக் குப்பை இல்லாத நகரமாக மாற்றுவதை வலியுறுத்தும் வகையில், 'குப்பை நடை' என்ற பெயரில் விழிப்புணர்வுப் பேரணி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம், மதுரை மாவட்ட நிர்வாகம் சார்பில், மதுரை தைக்கால் உயர்நிலைப் பாலத்தில் தொடங்கிய இந்தப் பேரணியை மதுரை மாநகராட்சி மேயர் (பொ) தி.நாகராஜன் தொடங்கிவைத்தார்.

இதற்கு தீபம் மகளிர் மேம்பாட்டு இயக்க மாவட்டச் செயலர் ராதிகா, தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் ஆண்டனி பால் ஆகியோர் தலைமை வகித்தனர். முன்னாள் மாவட்டத் தலைவர் எஸ். தினகரன் குப்பை மேலாண்மையின் அவசியம் குறித்து விளக்கினார்.

இதையடுத்து, மாநகராட்சி மேயர் (பொ) தி. நாகராஜன் பேசியதாவது:

மதுரையை தூய்மையான நகரமாக மாற்ற மக்கள் ஒத்துழைப்பு இன்றியமையாதது. குப்பையை முறையாகச் சேகரிக்கும் வாகனங்கள் இயக்கப்பட்டாலும், சிலர் பொது இடங்களில் குப்பையைப் போடுவது நகரின் சுகாதாரத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மக்களிடையே பொறுப்புணர்வும், விழிப்புணர்வும் வளர வேண்டும்.




மதுரையைக் குப்பை இல்லாத நகரமாக மாற்றும் வகையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 'குப்பை நடை' விழிப்புணர்வுப் பேரணியில் பங்கேற்றவர்கள்.

இதேபோல, மாநகராட்சியும் தனது பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். மக்கள் தொகைக்கு ஏற்ப வாகனங்கள், பணியாளர்கள், குப்பை மேலாண்மை கட்டமைப்புகளை வலுப்படுத்த வேண்டும்.

குப்பையிலிருந்து மின்சாரம், எரிவாயு தயாரிக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. கழிவுநீரைச் சுத்திகரித்து பயன்படுத்தும் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, குப்பை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு புகார்கள் எழுந்துள்ளன. லாப நோக்கமே பிரதானமாக இருப்பதால் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தனியார் நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்து, போதுமான வாகனங்கள், தூய்மைப் பணியாளர்களை நியமித்து நேரடியாக குப்பை மேலாண்மையை மேம்படுத்த மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

பொதுமக்களும் முழு ஒத்துழைப்பு வழங்கினால் மதுரையை தூய்மையான நகரமாக மாற்ற முடியும் என்றார் அவர்.

இதைத் தொடர்ந்து, குப்பை நடை விழிப்புணர்வுப் பேரணி அண்ணா தோப்பில் நிறைவடைந்தது.

**ஆவின் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,**

செல் எண் : 8148838237 கிருஷ்ணகிரி இ-மெயில் : aavindpi@gmail.com

ந.க.எண். 5252/Mkg.2/2025 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள் : 24.06.2026

கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ஒசூர் மற்றும் கிருஷ்ணகிரி நகரம் மற்றும் புற நகர பகுதிகளில் பால் விநியோகம் செய்ய 08 வாகனங்கள் மற்றும் விற்பனை அபிவிருத்திக்காக 5 பேர் (4+1) பயணிக்கும் கார் ஒன்றும் இயக்கிட இரு பகுதி (Two part system) அடிப்படையில் அத்தாட்சி பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 2026-27-ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி தொடர்பான இதர விவரங்கள் மற்றும் டெண்டர் படிவங்கள் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி பற்றிய விளக்க கூட்ட நாள் **08.07.2026, காலை 11.00 மணி.** நிறைவு செய்யப்பட்ட இரு பகுதி ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் Online மூலம் பெறப்பட வேண்டிய கடைசி நாள் **16.07.2026 மாலை 03.00 மணி வரை** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பகுதி 1 மட்டும் (தொழில்நுட்ப பிரிவு மட்டும்) ஒப்பந்த குழு அலுவலர்கள் முன்னிலையில் **17.07.2026 அன்று மாலை 3.45 மணி** அளவில் திறக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்த படிவங்கள் மற்றும் டேவணித்தொகை https://tntenders.gov.in என்ற நிர்ணயிக்கப்பட்ட வலைதள முகவரியில் குறிப்பிட்ட தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளவோ/ தள்ளி வைக்கவோ/ பிரித்து அளிக்கவோ / ரத்து செய்யவோ பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

பொது மேலாளர்,

செ.ம.தொ.இ./2148/ஒப்பந்தப்புள்ளி/2026 கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,

**CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL**

(An Autonomous Institute, Ministry of Education, Govt.of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai-600100.

**RECRUITMENT NOTIFICATION FOR ASSOCIATE PROFESSOR**
NOTIFICATION No.03/CICT/Professor/2026-2027

Date: 28.06.2026

**Central Institute of Classical Tamil, Chennai (CICT)** invites applications from Indian Nationals, who fulfill the prescribed qualification, experience, age and other conditions as per the UGC Regulations for filling up the following posts sanctioned on regular basis, as per the details given below:-

| S.No. | Name of the Post | Academic Level | No. of Post | Category | Method of Recruitment |
|---|---|---|---|---|---|
| 1. | Associate Professor | Level 13A of 7th CPC as per UGC | 06 | UR-5 OBC-1 | Direct |

The details of the posts, educational qualification, age, experience and application format are available in the Institute's website **www.cict.in.** Applications complete in all aspects along with requisite application fee and all necessary documents should reach within 60 days of publication of this advertisement to "The Registrar, Central Institute of Classical Tamil, Chemmozhi Salai, Perumbakkam, Chennai-600100".

Sd/-
**Registrar**

## திருமங்கலம் அரசு மருத்துவமனையில் ரத்த வங்கி கட்டடத்தை திறக்கக் கோரிக்கை

**திருப்பரங்குன்றம், ஜூன் 28:** திருமங்கலம் அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ.25 லட்சத்தில் கட்டப்பட்டு 4 ஆண்டுகளுக்கும் மேலாகியும் பயன்படுத்தப்படாமல் பூட்டியே கிடக்கும் ரத்த வங்கி கட்டடத்தை உடனே திறக்க சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.

திருமங்கலம் அரசு மருத்துவமனை வளாகத்தில் அவசரக் காலங்கள், அறுவைச் சிகிச்சைகளின் போது, நோயாளிகளுக்குத் தேவையான ரத்தம் தடையின்றிக் கிடைக்க ரத்த வங்கிக்கு தனிக் கட்டடம் கட்ட முடிவு செய்யப்பட்டது.

இதனடிப்படையில், தேசிய சுகாதாரப் பணிகள் திட்டத்தின் கீழ் ரூ.25 லட்சத்தில் குளிர்சாதன வசதியுடன் கூடிய புதிய ரத்த வங்கி கட்டடம் கட்டப்பட்டது.

இந்தக் கட்டடம் கட்டப்பட்டு 4 ஆண்டுகளுக்கு மேலாகியும், இதுவரை மக்களின் பயன்பாட்டுக்கு திறக்கப்படாமல் பூட்டியே கிடக்கிறது.



திருமங்கலம் அரசு மருத்துவமனை வளாகத்தில் பூட்டிக் கிடக்கும் புதிய ரத்த வங்கிக் கட்டடம்.

மேலும், ரத்த வங்கிக்காகக் கொண்டு வரப்பட்ட ரூ.பல லட்சம் மதிப்பிலான அதிநவீன மருத்துவக் கருவிகளும் பயன்படுத்தப்படாமல் வீணாகி வருகின்றன.

தற்போது அவசரக் காலங்களில் நோயாளிகளுக்குத் தேவைப்படும் ரத்தம், தனியார் ரத்த வங்கிகள், தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் மூலமாகவே பெறப்பட்டு வருகிறது.

இதனால், நோயாளிகளின் குடும்பத்தினர் ரத்தம் பெறுவதற்கு பெரும் அவதியுறும் நிலை ஏற்படுகிறது.

எனவே, பொதுமக்களின் நலன் கருதி, திருமங்கலம் அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டு, பூட்டிக் கிடக்கும் புதிய ரத்த வங்கி கட்டடத்தை உடனடியாக திறக்க மாவட்ட நிர்வாகமும், மக்கள் நல்வாழ்வுத் துறையும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.